செ.வெ. எண்: 525 நாள்: 06.09.2012

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 5–9–2012 அன்று தலைமைச் செயலகத்தில், கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி மாணவ, மாணவிகள் மற்றும் சுயதொழில் புரிவோர்களுக்கு விலையில்லா இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கினார்கள். மேலும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் சிறப்புப் பள்ளிகளில் தமிழை பயிற்றுமொழியாக கொண்டு 2011–2012ஆம் கல்வியாண்டில் 10 மற்றும் 12–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ரொக்கப்பரிசுகள் வழங்கி அவர்களைப் பாராட்டினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஆய்வு செய்த போது கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி மாணவ, மாணவிகள் மற்றும் சுயதொழில்புரிவோர், வீட்டிலிருந்து எளிதில் கல்வி நிலையங்களுக்கும், பணிபுரியும் இடங்களுக்கும் சென்று வர அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த பேட்டரியால் இயங்கும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட மூன்று சக்கர மோட்டார் வாகனங்களுக்கு மாற்றாக பெட்ரோலில் இயங்கும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட விலையில்லா மோட்டார் வண்டிகள் வழங்க உத்தரவிட்டிருந்தார்கள். இதற்கென 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டார்கள். அதன்படி, கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி மாணவ, மாணவிகள் மற்றும் சுயதொழில்புரியும் 61 மாற்றுத் திறனாளிகளுக்கு பெட்ரோலில் இயங்கும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

2011–2012 ஆம் கல்வியாண்டில் தமிழை மொழிப்பாடமாகக் கொண்டு பயின்று அரசு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாற்று திறனாளி மாணவ, மாணவிகளுக்கு பரிசுத் தொகைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

காது கேளாத மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியரில் 12–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் இடம் பெற்ற மாணவன் D. ரஞ்சித்திற்கு 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும், இரண்டாம் இடம் பெற்ற மாணவன் R. கௌதமிற்கு 30 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும், மூன்றாம் இடம் பெற்ற மாணவி K. நந்தினிக்கு

20 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் மற்றும் பார்வையற்ற மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியரில் 12–ஆம் வகுப்பு அரசு பொது தேர்வுகளில் மாநில அளவில் முதல் இடம் பெற்ற மாணவி K. ஸ்ருதிக்கு 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும், இரண்டாம் இடம் பெற்ற மாணவன் L. ராம்பிரசாதிற்கு 30 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும், மூன்றாம் இடம் பெற்ற மாணவன் V. முத்து சரவணனுக்கு 20 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு ஆகியவற்றை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

மேலும், காது கேளாத மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியரில் 10–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில், மாநில அளவில் முதல் இடம் பெற்ற மாணவன் K. விஜய்க்கு 25 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும், இரண்டாம் இடம் பெற்ற மாணவன், P.P. நவீனுக்கு 20 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும், மூன்றாம் இடம் பெற்ற மாணவன் R. வினோதப்பிரியனுக்கு 15 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் மற்றும் பார்வையற்ற மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியரில் 10–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதலிடம் பெற்ற மாணவன் S. முகேஷிற்கு 25 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும், இரண்டாம் இடம் பெற்ற பார்வையற்ற மாணவி M. பவானிக்கு 20 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும், மூன்றாம் இடம் பெற்ற பார்வையற்ற மாணவி R.ராஜிக்கு 15 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு ஆகியவற்றை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தில் வழங்கி, இம்மாணவ, மாணவிகள் வாழ்வில் உயர்ந்து நலன்கள் பல பெறவேண்டும் என்று வாழ்த்தினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து விலையில்லா இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை பெற்றுக் கொண்ட கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளும், ரொக்கப் பரிசுகளைப் பெற்றுக் கொண்ட மாற்றுத் திறனாளி மாணவ, மாணவிகளும் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறைச் செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நல மாநில ஆணையர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 6.9.2012